**O.S. No. : 21/2021**

Dated: 12.08.2026

**பி.வா.சா.1 : மகாதேவன் ; த/பெ. மடியன்**

**<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

28. என்னுடன் உடன்பிறந்தவர்கள் எத்தனை நபர்கள் என்றால் என்னுடன் சேர்த்து மொத்தம் 10 நபர்கள் ஆகும். அவர்களது பெயர்கள் என்ன என்றால் 1. ராஜு, 2. ராணி, 3. போஜன், 4. மணி, 5. சரஸ்வதி, 6. நாராயணன், 7. பேபி, 8. கணேஷ்குமார், 9. சுசீலா மற்றும் நான் ஆகும். எனது தாயார் பெயர் லட்சுமி ஆகும்.

29. நான் எனது சகோதரர் கணேஷ்குமார் என்பவருக்கு 20.12.2021 தேதியில் ஒரு பதிவு செய்யப்பட்ட செட்டில்மண்ட் ஆவணத்தை எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம்தான் அந்த செட்டில்மண்ட் ஆவணம் என்றால் சரிதான். **(அந்த 20.12.2021 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட செட்டில்மண்ட் பத்திரத்தின் பதிவாளர் அலுவலக சான்றிட்ட நகல் வா.சா.ஆ.18 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

30. வா.சா.ஆ.18 ஆவணத்தில் எனது சகோதரர் கணேஷ்குமார் என்பவர் டி. மைனாலா கிராமம் கதவு எண் 5/489 என்ற முகவரியில் குடியிருந்து வருவதாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வீடு மைனாலா ஊரில் இருப்பதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த கதவு எண் 5/489 கொண்ட வீட்டிற்கு வீட்டு வரி ரசீது இருக்கும் என்றால் சரிதான். அந்த வீட்டிற்கு மின் இணைப்பும் இருக்கும் என்றால் சரிதான்.

31. அவ்வாறு கதவு எண் 5/489 கொண்ட மின் இணைப்பு பெறப்பட்ட டி.மைனாலா ஊரில் உள்ள வீட்டில் எனது சகோதரர் கணேஷ்குமார் என்பவர் வசித்து வருகிறார் என்றால் சரிதான். மேற்படி கதவு எண் 5/489 கொண்ட வீட்டிலிருந்து நான் வசித்து

வரும் வீடு எவ்வளவு தொலைவில் உள்ளது என்றால் சுமார் 1 கி.மீ. தொலைவில் உள்ளது.

32. கதவு எண் 5/489 கொண்ட வீடு ஊருக்கு உள்ளே இருக்கிறதா அல்லது வெளியே இருக்கிறதா என்றால் ஊருக்கு உள்ளேதான் இருக்கிறது. மேற்படி கணேஷ்குமார் குடியிருப்பதாக சொல்லப்படும் வீடு வரிசையான வீடுகளில் ஒரு வீடா அல்லது தனி வீடா என்றால் அது தனி வீடுதான். அந்த வீடு ஓட்டு வீடா அல்லது சிமெண்ட் கூரை அமைக்கப்பட்ட வீடா என்றால் அது பற்றி தெரியவில்லை. அந்த வீட்டிற்கு என்ன வண்ணம் தற்போது பூசப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியவில்லை.

33. எனது சகோதரர் கணேஷ்குமார் இன்று என்னுடன் இந்நீதிமன்றத்திற்கு வந்துள்ளார் என்றால் சரிதான். எனது சகோதரர் கணேஷ்குமார் குடியிருக்கும் வீட்டிற்கு யார் பெயரில் வீட்டு வரி செலுத்தப்படுகிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. நீதிமன்றத்திலிருந்து நீதிமன்ற ஆணையர் வரும்போது என்னால் எனது சகோதரர் வசிக்கும் வீட்டை அடையாளம் காண்பிக்க முடியுமா என்றால் என்னால் அந்த வீட்டை அடையாளம் காண்பிக்க முடியாது.

34. அவ்வாறு ஒரு வீடு இல்லை என்பதால்தான் என்னால் அந்த வீட்டினை அடையாளம் காண்பிக்க இயலாது என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் அவ்வாறு வீடு இல்லாத நிலையில் அவ்வாறு வீடு உள்ளதாக ஆதார் அடையாள அட்டை மற்றும் வாக்காளர் அடையாள அட்டை தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

35. உண்மையாக அவ்வாறு ஒரு வீடு இல்லை என்றும், எனது சகோதரர் கணேஷ்குமார் என்பவர் பல வருடங்களாக

அரவங்காட்டில்தான் குடியிருந்து வருகிறார் என்றும் சொன்னால் சரியல்ல, தற்போதுதான் அரவங்காட்டில் குடியிருந்து வருகிறார், அதற்கு முன்பு ஊரில்தான் குடியிருந்தார்.

36. எனது சகோதரர் போஜன் என்பவர் எத்தனை வருடங்களாக கோயம்புத்தூரில் உள்ள நரசிம்மநாயக்கன்பாளையத்தில் குடியிருந்து வருகிறார் என்றால் கடந்த சுமார் 10 வருடங்களாக குடியிருந்து வருகிறார். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் எனது சகோதரர் போஜன் என்பவருக்கு வாய்மொழி பாகப்பிரிவினை மூலம் ஒதுக்கப்பட்டதாக சொல்லும் சொத்தினை அவர் எனக்கு தானமாக எழுதிக்கொடுத்ததாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

37. அவ்வாறு எனக்கு போஜன் அந்த சொத்தினை தானமாக எழுதிக்கொடுப்பதற்கு முன்பு 50 ஆண்டுகளாக அந்த வீட்டில் போஜன்தான் வசித்து வந்தார் என்றால் சரியல்ல, அந்த வீட்டில் யாரும் குடியிருக்கவில்லை. வா.சா.ஆ. 18 ஆவணத்தில் பழைய சர்வே எண் 726/1 மற்றும் இணையான புதிய சர்வே எண் 1007/1 மற்றும் 1007/2-ல் உள்ள 11.75 சென்ட் பூமி மற்றும் அதில் உள்ள கதவு எண் 5/540 கொண்ட வீடு ஆகியவற்றை நான் கணேஷ்குமார் என்பவருக்கு தானமாக கொடுத்ததாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

38. மேற்படி வா.சா.ஆ.18 ஆவணத்தில் மேற்படி தானமாக கொடுக்கப்பட்ட சொத்தின் வடக்கு எல்லையாக கோத்தகிரி-ஊட்டி பிரதான சாலையும், மேற்கில் டி.மைனலை கிராமத்திற்கு செல்லும் சாலை உள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு கூறப்பட்டுள்ள சொத்தினை நான் 1994 ஆம் ஆண்டு கிரையப்பத்திரத்தின்படி வாங்கியுள்ளதாக வா.சா.ஆ.18 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

39. அவ்வாறு கூறப்பட்டுள்ள 1994 ஆம் ஆண்டு ஆவணத்தை 12.07.1994 தேதியில் நஞ்சுண்டன், சுந்தரராஜ் மற்றும் ஜெயராமன் ஆகியோர் எனக்கு எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம்தான் அவர்கள் எனக்கு எழுதிக்கொடுத்த ஆவணம் என்றால் சரிதான். **(அந்த 12.07.1994 தேதியிட்ட கிரையப்பத்திரத்தின் பதிவாளர் அலுவலக சான்றிட்ட நகல் வா.சா.ஆ.19 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

**(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வழக்கிற்கு தொடர்பில்லாத சொத்துக்கள் குறித்து எந்தவித வழக்குரையும் (pleadings) இல்லாமல் கேள்வி கேட்கப்படுவதாகவும், மேற்படி கேள்விகள் இந்த வழக்கிற்கு தொடர்பில்லாத கேள்விகள் என்றும் ஆட்சேபனை செய்தார், அவரது ஆட்சேபனை பதிவு செய்யப்பட்டு, வாதி தரப்பு வழக்கறிஞரிடம் வழக்கிற்கு தொடர்பில்லாத கேள்விகளை கேட்க வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டது).**

40. வா.சா.ஆ.19 ஆவணத்தில் பழைய சர்வே எண் 726/3 மற்றும் 726/1–ல் மொத்தம் 0.70 ஏக்கர் விவசாய பூமியை நான் கிரையம் பெற்றதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.19 ஆவணத்தின் அடிப்படையில்தான் நான் எனது சகோதரர் கணேஷ்குமாருக்கு வா.சா.ஆ.18 செட்டில்மண்ட் ஆவணத்தை எழுதி வைத்துள்ளேன் என்றால் சரிதான்.

41. வா.சா.ஆ.18 ஆவணத்தில் 11.75 சென்ட் பூமியில் ஒரு கட்டிடம் உள்ளதாகவும் அந்த கட்டிடத்தின் மதிப்பு ரூ.14 லட்சம் என்றும் கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு வா.சா.ஆ.18 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டிடத்தை என்னால் புகைப்படத்தில் அடையாளம் காட்ட முடியுமா என்றால் முடியும். வா.சா.ஆ.18 ஆவணத்தில் அந்த கட்டிடத்தில் உள்ள மின் இணைப்பு எண் 03–405–013–524 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால்

சரிதான். அந்த கட்டிடத்தின் கதவு எண் 5/540 என்று வா.சா.ஆ.18 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

42. வா.சா.ஆ.18 ஆவணத்துடன் இணைக்கப்பட்டுள்ள இணைப்பு A–ல் அந்த கட்டிடம் 25 வருட சிமெண்ட் மற்றும் செங்கலால் கட்டப்பட்டது என்றும், அந்த கட்டிடத்துடன் தனி கழிவறை கட்டிடம் உள்ளதாகவும், அந்த கட்டிடத்தில் தளமானது சிமெண்ட்டால் அமைக்கப்பட்டுள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

43. அந்த வா.சா.ஆ.18 ஆவணத்துடன் வீட்டு வரி ரசீது மற்றும் மின் கட்டண ரசீது எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படங்களில் உள்ள சொத்துதான் வா.சா.ஆ.18–ல் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து என்றால் அது பற்றி கூற இயலவில்லை. வா.சா.ஆ.18–ல் குறிப்பிடப்பட்டுள்ள புதிய சர்வே எண்கள் 1007/1 மற்றும் 1007/2–ல் மேற்படி புகைப்படத்தில் உள்ள ஒரு வீடு மட்டும்தான் உள்ளது என்றால் சரியல்ல.

44. எனக்கும், எனது சகோதரருக்கும் இல்லாத ஒரு வீட்டினை இருப்பதாக காண்பித்து ஆவணங்ளை உருவாக்குவதுதான் வாடிக்கை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.18 ஆவணத்தில் கூறியுள்ள வீட்டினை என்னால் நீதிமன்ற ஆணையர் வந்தால் அடையாளம் காட்ட முடியுமா என்றால் என்னால் அடையாளம் காண்பிக்க முடியாது. உண்மையில் வா.சா.ஆ.18 ஆவணத்தில் கூறப்பட்டுள்ளவாறு வீடு எதுவும் இல்லை என்பதால்தான் என்னால் அடையாளம் காண்பிக்க இயலாது என்று நான் கூறுகிறேன் என்றால் சரியல்ல.

45. எனது சகோதரர் கணேஷ்குமார் என்பவர் குடியிருப்பதாக சொல்லும் கதவு எண் 5/489 கொண்ட வீடும் உண்மையில் இல்லை

என்றும், அவ்வாறு இருந்திருந்தால் அதை நான் நீதிமன்ற ஆணையரிடம் அடையாளம் காண்பிப்பதாக கூறியிருப்பேன் என்றும் சொன்னால் சரியல்ல.

46. பி.வா.சா.ஆ.1 ஆவணம் சர்வே எண் 715 மற்றும் 717/1A –ல் எங்களின் குடும்பத்திற்கு 0.03 ½ ஏக்கர் நிலம் மற்றும் அதில் உள்ள கதவு எண் 5/482 கொண்ட வீடு உள்ளதாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். பழைய சர்வே எண் 715 மற்றும் 717/1A –ல் எங்களுக்கு 3 ½ சென்ட் பூமியை தவிர வேறு பூமி கிடையாது என்றால் சரியல்ல, வீடு உள்ளதுதான் 3 ½ சென்ட் பூமியாகும், அது தவிர அதே சர்வே எண்ணில் வேறு காலி பூமிகள் எங்கள் குடும்பத்திற்கு உள்ளது.

47. பழைய சர்வே எண் 715 மற்றும் 717/1A–ல் எங்களுக்கு 3 ½ சென்ட் பூமியை தவிர எவ்வளவு விஸ்தீரணம் உள்ள பூமி உள்ளது என்றால் அது பற்றி எனக்கு சரியாக தெரியவில்லை. எனது தாயார் லட்சுமி என்பவர் 1982 ஆம் ஆண்டில் ஆவண எண் 819/1982–ன் மூலம் சர்வே எண் 717/1A–ல் 2 சென்ட் பூமியை எனது சகோதரர் ராஜு என்பவருக்கு தானமாக கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு நான் அப்போது சிறிய வயதில் இருந்ததால் தெரியவில்லை.

48. எங்களுக்கு சர்வே எண் 717/1A–ல் மீதம் பூமி இருந்தால் அது குறித்து எனது தாயார் எனது சகோதரர் ராஜுவிற்கு 31.12.1982 தேதியில் எழுதிக்கொடுத்த ஆவண எண் 819/1982–ல் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. ஊரில் யார் யார் பூமியை காலியாக வைத்துள்ளார்களோ அந்த பூமிக்கு ஒரு ஆவணத்தை ஏற்படுத்தி வலுக்கட்டாயமாக அந்த பூமியின் சுவாதீனத்தை பெறுவதுதான் எனது வேலை என்றால் சரியல்ல.

49. அவ்வாறுதான் இந்த வழக்கு சொத்தினையும் வாதியிடமிருந்து வலுக்கட்டாயமாக சுவாதீனத்தை பெற நான் முயற்சி செய்தேன் என்றும் அதனால்தான் வாதி இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்றும் சொன்னால் சரியல்ல. நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் சர்வே எண் 717/1–ல் எனக்கு வேறு பூமிகள் உள்ளதாக கூறவில்லை என்றால் சரிதான்.

50. வழக்கு சொத்திற்கும், எனக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்றும், அதனால் வாதிகள் கோரியுள்ளபடி வழக்கின் பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என்றும் சொன்னால் சரியல்ல, சொத்து எங்களுடையதாகும். நான் தாக்கல் செய்துள்ள வீட்டு வரி ரசீதுகள் அனைத்தும் 2021 ஆம் ஆண்டிற்கு பிந்தையது என்றும் அதற்கு முன்பாக 50 ஆண்டுகளாக வீடு உள்ளதாக கூறும் காலத்திற்கான வீட்டு வரி ரசீதுகள் எதுவும் இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன்.

51. பி.வா.சா.ஆ.3 மற்றும் பி.வா.சா.ஆ.4 ஆவணங்களான வீட்டு வரி ரசீதுகளில் தேதி எங்கும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி பி.வா.சா.ஆ.3 மற்றும் பி.வா.சா.ஆ.4 ஆவணங்கள் இந்த வழக்கிற்காக என்னால் உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி பி.வா.சா.ஆ.3 மற்றும் பி.வா.சா.ஆ.4 ஆவணங்கள் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டதற்கு பின்பு உருவாக்கப்பட்டவை என்றால் சரியல்ல.

52. நான் கூறியவாறு கதவு எண் 5/482 கொண்ட வீடு 50 வருடங்களாக இருந்திருந்தால் அந்த வீட்டிற்கு 50 வருடங்களாக தும்மனட்டி பஞ்சாயத்திற்கு வரி கட்டப்பட்டிருக்கும் என்றால் சரிதான்.

<u>மறுவிசாரணை:</u> இல்லை.

LOGANATHAN PRAKASH

Digitally signed by LOGANATHAN PRAKASH
Date: 2026.08.12 19:58:33 +0530